# IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.

## O.S.No. 147 Of 2014

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | DW1 |
| **Name of the Witness** | : | சண்முகம் |
| **Father's Name** | : | |
| **Age** | : | |
| **Occupation** | : | |
| **Address** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 16th day of July, 2025.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-

நான் எதுவும் படிக்கவில்லை. நான் விவசாயம் வேலை செய்கிறேன். நான் வாதிக்கு கிரையம் கொடுத்த பி.வா.த.சா.ஆ. 1 கிரையப்பத்திரம் முன்னிலைக்கு 3 ஏக்கர் 4 ½ செண்ட் கிரையம் கொடுத்துள்ளேன். கிரைய தொகை ரூ. 47 லட்சம் ஆகும். ரூபாய் 8,95,875/- தொகையை எனக்கும் எனது சகோதரருக்கும் சொத்து சம்பந்தமாக பாகவழக்கு இருக்கும் காரணத்தினால் பிடித்தம் செய்துக்கொண்டு மீதி தொகை மட்டும் தான் கொடுத்தார். கையில் கிரையதொகையாக சிறிது சிறிதாக தான் நான் பணம் வாங்கினேன். பி.வா.த.சா.ஆ. 1 கிரையப்பத்திரத்தில் மொத்த தொகையும் வாதி கொடுத்து விட்டதாகத் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். கிரையப்பத்திரம் எழுதி பதிவு செய்த காலத்தில் மேற்படி ரூ.8,95,875/- தொகை வாதி எனக்கு பாக்கியாகும். அதற்காகத் தான் பி.வா.த.சா.ஆ. 2, 10.11.2010 தேதியிட்ட உறுதிமொழியை வாதி எழுதி கொடுத்தார். தெரிந்தவர் என்ற காரணத்தினால் கிரைய தேதி அன்றே உறுதிமொழி பத்திரம் நான் வாங்கிக் கொள்ளவில்லை. எனக்கு கிடைத்த கிரையத்தொகையை நான் விவசாயத்திற்கு செலவு செய்து வருகிறேன். நான் கிரையம்பெற்ற .வா.த.சா.ஆ. 5 கிரைய ஆவணம் என்னிடம்

இருந்து வேறு தொகை மூலமாக கிரையம் பெறப்பட்டதாகும். பி.வா.த.சா.ஆ.1 கிரையப்பத்திரம் மூலமாக கிடைக்கப்பட்ட கிரையத்தொகையில் வாங்கியது கிடையாது. பாக்கி தொகைக்கு வாதி மீது நான் நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கு போதிய விவரம் இல்லாததால் தொகையை பெற நடவடிக்கை எடுக்கவில்லை. எனக்கும் என் அண்ணனுக்கும் உள்ள வழக்கை வாதி நடத்தி கொடுப்பததாக கூறினார் ஆனால் அதுபோல் நடத்திக் கொடுக்கவில்லை. வாதி தான் அந்த வழக்கில் எனக்கு வழக்கறிஞர் இன்று வரை எனக்கும் என் அண்ணனுக்கும் இடையே நடக்கும் வழக்கை பற்றிய நிலை எனக்கு தெரியாது. நான் தற்போது வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும் வாதி நான் சொல்லுவது போல் வழக்கு எதுவும் நடத்தி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்கு வக்கலாத்து போட்டுள்ளதை காண்பிக்க ஆதாரம்எதுவும் நீதிமன்றத்தில் இருந்து நான் பெற்று நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வெற்றுபத்திரம் மற்றும் வெற்று தாள்களில் வாதி என்னிடம் வழக்கிற்காக கையொப்பம் வாங்கியதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் நான் பணம் எதுவும் வாங்கவில்லை என்னிடம் பெற்ற வெற்றுபத்திரத்தை நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வா.த.சா.ஆ. 5 கிரையப்பத்திரம் நான் கொடுத்தது தான். வழக்கு முடியும் வரை தன்னிடம் இருக்கட்டும் என்று வாங்கி வைத்துக்கொண்டார் அது தான் வா.த.சா.ஆ. 5 கிரையப்பத்திரம் நான் ரூ 10 லட்சம் வாதியிடம் வா.த.சா.ஆ. 1 ஒப்பந்தம் முன்னிலைக்கு வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ. 1 ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வழக்கிற்காக பி.வா.த.சா.ஆ. 2 நான் வாதி கொடுத்ததாக போலியாக தயாரித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.1 கிரையப்பத்திரம் ஏற்பட்ட சமயத்திலேயே மொத்த கிரையத் தொகையை வாதி கொடுத்து விட்டார் என்றால் வாதி எந்த தொகையும் பாக்கி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

பாக்கி எதுவும் இல்லாத காரணத்தினால் நான் வாதி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 ஒப்பந்தத்தை முறியடிப்பதற்காக பி.வா.த.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/Tmt.G.Saraswathi, M.L.,*
*I Additional District Judge*
*Cuddalore.*